1996 ஆகஸ்டு 5] [திரு. அ. இரகுமான்கான்]

அவர்கள் அந்தத் தொழிலாளர்களின் பிரச்சினையில் மிகுந்த அக்கறை காட்டிக் கொண்டிருக்கிறார்கள். அதனால்தான் 1989-ல் பல பேர்களுக்கு வேலை கொடுக்கப்பட்டிருக்கிறது. நிதி நெருக்கடி போன்ற பல்வேறு காரணங்கள் இருந்தாலும், இது குறித்து முதல்வர் அவர்களுடன் கலந்து பேசி, பிரச்சினையை ஆய்ந்து அரசு ஒரு கொள்கை முடிவை எடுக்கும் என்பதை உறுப்பினருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 10-45

திரு. கே. சுப்பராயன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சொன்னதில் இரண்டு விஷயங்களைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன். ஒன்று, 'பிரேக்-ஆஃப் சர்வீசை' ஒப்புக்கொண்டு அந்தத் தொழிலாளர்கள் கடிதம் கொடுத்து இருக்கிறார்கள் என்று சொன்னார்கள். நீண்ட காலம் வேலை மறுக்கப்பட்ட நிலையில், வறுமையில் வாடிக் கொண்டிருப்பவர்களை, அந்த வறுமையைப் பயன்படுத்தி, நாம் அவர்களை "பிரேக்-ஆஃப் சர்வீஸ்க்கு" ஒப்புக்கொள்ள வைப்பது நல்லதல்ல. எனவே, எடுத்துக் கொண்டவர்களையும் சரி, எடுத்துக் கொள்ளாதவர்களையும் சரி, எல்லோரையும், கருணை அடிப்படையிலும் சட்ட அடிப்படையிலும் மீண்டும் 'சர்வீஸ் கண்டினியுட்டி' கொடுத்து முழுச் சம்பளத்தோடு வேலைக்கு அமர்த்திக் கொள்ள அரசு முன் வருமா என்பதை மீண்டும் தங்கள் மூலம் வலியுறுத்திக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது மிக மிக நிதிச்சுமை சம்பந்தப்பட்ட பிரச்சினையானாலும் முதல்வர் அவர்களோடு கலந்து, பரிசீலித்து, ஆலோசித்து, கொள்கை ரீதியான முடிவு எடுக்கப்படும் என்ற தகவலை திரும்பவும் சொல்லிக் கொள்கிறேன்.

(ஆ) வேலூர் தாலுக்கா சேண்பாக்கம் காலனியில் ரேஷன் கடை திறத்தல் குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்பு. திரு. சி. ஞானசேகரன் அவர்கள், அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு உணவு மற்றும் பொது விநியோகத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூர் தாலுக்கா சேண்பாக்கம் காலனிக்கு தனியாக ரேஷன் கடை திறக்காததால் ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு உணவு மற்றும் பொது விநியோகத் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. கே. என் நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவையிலே வைக்கப்பெற்றிருக்கிறது.

அறிக்கை

கிராமப் புற பகுதிகளில் இன்றியமையாதப் பொருட்களை பெறுவதற்கு தங்களுக்கு ஒதுக்கப்பட்ட நியாயவிலைக் கடைகளை அடைவதற்கு சுமார் 2 கிலோ மீட்டரிலிருந்து 4 கிலோமீட்டர் வரை நடக்க வேண்டியுள்ளதால் பல புதிய நியாயவிலைக் கடைகளைத் திறக்க அரசுக்கு கோரிக்கைகள் வருகின்றன.

2. இதற்காக ஒரு முன்னோடித் திட்டமாக 800க்கும் அதிகமாக குடும்ப அட்டைகள் உள்ள பிரதான நியாயவிலைக் கடையிலிருந்து, தேவையான குடும்ப அட்டைகளைப் பிரித்து மகளிரே நடத்தும் சில்லறை துணை விற்பனை அங்காடிகள் தேர்ந்தெடுக்கப்பட்ட இடங்களில் நடத்தும் திட்டம் நடைமுறையில் உள்ளது.

3. மகளிரே இக்கடையை நிர்வகிப்பதால், எடை குறைவு, பொருள்களை வெளிமார்க்கெட்டில் விற்பனை செய்தல், திருட்டு போன்ற குறைபாடுகள் எழ வாய்ப்பில்லை.

4. வடாற்காடு அம்பேத்கர் மாவட்டம், வேலூர் வட்டம், சேண்பாக்கம் கிராமத்தில் வேலூர் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தினால் நடத்தப்படும் சேண்பாக்கம் நியாயவிலைக் கடையிலிருந்து சேண்பாக்கம் காலனியில் 500 குடும்ப அட்டைகளுடன் சேண்பாக்கம் மகளிர் துணை சில்லறை விற்பனை அங்காடி அமைக்க வடாற்காடு அம்பேத்கர் மாவட்ட ஆட்சித் தலைவர் 6-10-95-ல் கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளருக்கு முன்மொழிவு பரிந்துரை செய்துள்ளார். கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் 12-10-95-ல் சேண்பாக்கம் காலனியில் 500 குடும்ப அட்டைகளுக்கு என மகளிர் துணை சில்லறை விற்பனை

1996 ஆகஸ்டு 5] [திரு. கே. என். நேரு]

அங்காடி அமைக்க இசைவு தெரிவித்ததன் பேரில் மாவட்ட ஆட்சித் தலைவரால் *21-10-95*-ல் ஆணை வழங்கப்பட்டு *1.11.95*-ல் சேண்பாக்கம் பிள்ளையார் கோயில் தெருவில் சேண்பாக்கம் காலனி மகளிர் துணை சில்லறை விற்பனை அங்காடி திறக்கப்பட்டு தொடர்ந்து செயல்பட்டு வருகிறது. சேண்பாக்கம் பிரதான நியாயவிலைக் கடையில் இருந்த *1,426* குடும்ப அட்டைகளில் சேண்பாக்கம் காலனியைச் சார்ந்த *500* குடும்ப அட்டைகள் பிரிக்கப்பட்டு சேண்பாக்கம் மகளிர் துணை சில்லறை விற்பனை அங்காடியில் சேர்க்கப்பட்டுள்ளது. சேண்பாக்கம் பிரதான நியாயவிலைக் கடைக்கும் சேண்பாக்கம் காலனி மகளிர் துணை சில்லறை விற்பனை அங்காடிக்கும் இடைப்பட்ட தூரம் *1* கிலோ மீட்டர் ஆகும். சேண்பாக்கம் பிரதான நியாயவிலைக் கடை திரௌபதியம்மன் கோயில் தெருவில் *926* குடும்ப அட்டைகளுடன் தற்போது செயல்பட்டு வருகிறது.

5. சேண்பாக்கம் பிரதான நியாயவிலைக் கடையுடன் இணைக்கப்பட்டுள்ள குடும்ப அட்டைகள் மற்றும் சேண்பாக்கம் காலனி துணை சில்லறை விற்பனை அங்காடியுடன் இணைக்கப்பட்டுள்ள குடும்ப அட்டைகளின் விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

சேண்பாக்கம் பிரதான நியாயவிலைக் கடை, *284*, திரௌபதியம்மன் கோயில் தெரு, சேண்பாக்கம், வேலூர்-*8*:—

வ. எண்.	தெருவின் பெயர்.	குடும்ப அட்டைகளின் எண்ணிக்கை.	நியாயவிலைக் கடைக்கு உள்ள தூரம்.
1.	பிள்ளையார் கோயில் தெரு	*438*	
2.	பச்சையம்மன் கோயில் தெரு	*25*	
3.	சத்தியமூர்த்தி தெரு	*30*	
4.	காமராஜர் தெரு	*124*	*0.5* கி.மீ.
5.	திரௌபதியம்மன் கோயில் தெரு	*66*	
6.	இருளர் காலனி	*68*	
7.	இதர தெருக்கள்	*175*	
		926	

[திரு. கே. என். நேரு] [1996 ஆகஸ்டு 5

சேண்பாக்கம் காலனி மகளிர் துணை சில்லறை விற்பனை அங்காடி, 251 (பி), பிள்ளையார் கோயில் தெரு, சேண்பாக்கம், வேலூர்-2. :—

வ. எண்.	தெருவின் பெயர்.	குடும்ப அட்டைகளின் எண்ணிக்கை	கடைகளுக்குள்ள தூரம்
1	சோலாபுரியம்மன் தெரு	92	
2	சின்ன தெரு	64	
3	மீனாம்பாள் வடக்குத் தெரு	50	
4	ஈஸ்வரன் கோயில் தெரு	129	
5	பாரதியார் தெரு	35	
6	புரட்டுமாரன் தெரு	7	0.5 கி.மீ.
7	நேரு தெரு	8	
8	கழனிகாட்டுத் தெரு	14	
9	அம்பேத்கர் தெரு	6	
10	படவேட்டம்மன்பாறை	53	
11	களத்துமேடு	16	
12	மாதாகோயில் தெரு	22	
13	கன்சால்பேட்டை	4	
	மொத்தம்	500	

மேற்படி மகளிர் துணை சில்லறை விற்பனை அங்காடி சேண்பாக்கம் காலனியிலேயே பிள்ளையார் கோயில் தெருவில் வடாற்காடு-அம்பேத்கர் மாவட்ட ஆட்சித் தலைவரால் தேர்வு செய்யப்பட்ட டோக்ரா (Development of Women and Children in Rural Areas) திட்டத்தில் உறுப்பினரான செல்வி உமாராணி என்பவரால் நடத்தப்பட்டு வருகிறது.

எனவே, சேண்பாக்கம் காலனியில் தற்போது தனியாக ஒரு மகளிர் துணை சில்லறை விற்பனை அங்காடி செயல்பட்டு வருகிறது. இப்பகுதியில் பதட்ட நிலை ஏதும் நிலவவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

1996 ஆகஸ்டு 5]

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய அறிக்கையைப் பார்த்தேன். அந்த அறிக்கையில் ஏற்கெனவே, 1-11-95-ல் திறந்துவிட்ட ஒரு கடையைப் பற்றி குறிப்பிட்டிருக்கிறார்கள். சேண்பாக்கம் பகுதியிலே, முள்ளிப் பாளையம், இந்திரா நகர் போன்ற தேசிய நெடுஞ்சாலையினை ஒட்டி இருக்கக்கூடிய பகுதிகளுக்கு இன்னொரு கடையைத் திறக்க வேண்டுமென்பதுதான் என்னுடைய கோரிக்கை. மாண்புமிகு அமைச்சர் அவர்கள், கொள்கை விளக்கக் குறிப்பிலே சொல்லியிருக்கிறார்கள். அதாவது 800 ரேஷன் கார்டுகள் இருக்கக்கூடிய இடங்களில் எல்லாம் மகளிரை வைத்து தனியாக கடைகளைத் தொடங்க இருக்கிறோம் என்ற அறிவிப்பை அதில் வெளியிட்டு இருக்கிறார்கள். தற்போது, திரௌபதியம்மன் கோயில் தெருவில் இருக்கக்கூடிய கடையில், கிட்டத்தட்ட 1000 கார்டுகளுக்கு மேல் இருக்கிறது. எனவே, தேசிய நெடுஞ்சாலையை ஒட்டி இருக்கக்கூடிய முள்ளிப்பாளையம், இந்திராநகர் போன்ற பகுதிகளைக் கொண்ட அந்த சேண்பாக்கம் காலனிக்கு மகளிரே நடத்தக்கூடிய ஒரு கடையைத் திறக்க அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உணவு மானியத்திலே மிகவும் தெளிவாக எடுத்துக் கூறப்பட்டிருக்கிறது. இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட இடத்திலே மகளிரால் நடத்தப்படும் கடை திறக்கப்படுமா என்று இங்கே அறிய விரும்புகிறார். உறுதியாக அங்கே 800 கார்டுகளுக்கு மேல் இருப்பதைக் கருதி, தனியாக அங்கே ஒரு கடை அமைக்கப்படும் என்கிற உறுதியை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால், மாண்புமிகு உறுப்பினர் எப்போது பார்த்தாலும் வேலூரிலே பதட்ட நிலையாகவே இருந்து கொண்டிருக்கிறது என்கிறார். அது எப்படி என்று எங்களுக்குத் தெரியவில்லை *(சிரிப்பு)* டயர் இல்லையென்றால் பதட்டநிலை வருகிறது. கடையில்லையென்றால் பதட்ட நிலை வருகிறது. அது எப்படி என்று உறுப்பினர் அவர்கள் விளக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவர் நிரந்தரமாகவே பதட்டத்தோடு இருப்பவர் *(சிரிப்பு)*.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பதட்டநிலை என்று சொன்னால்தான் விதி 55-ன் கீழும், 56-ன் கீழும் நம்முடைய பேரவைத் தலைவர் அவர்கள் பேச விடுவார்கள். ஆனால் பதட்டநிலை என்று நான் குறிப்பிட்டிருப்பது பொய்யாகக்

[திரு. சி. ஞானசேகரன்] [*1996* ஆகஸ்டு *5*

குறிப்பிடவில்லை. உண்மைக்குப் புறம்பாக எதையும் குறிப்பிடவில்லை என்பதை இங்கே தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள், மகளிரே நடத்துகின்ற கூட்டுறவுக் கடையை, 800-க்கு மேற்பட்ட கார்டுகள் இருக்கும் கடையைப் பிரித்து உடனடியாக அமைக்கப்படும் என்று உத்தரவிட்டிருக்கிறார்கள். இப்போது தமிழகத்தில் பல கடைகளில் இந்தப் பிரச்சினை இருக்கிற காரணத்தினால், எவ்வளவு நாட்களுக்குள், மகளிரே நடத்துகின்ற நியாயவிலைக் கடைகள் தமிழகத்திலே துவங்கப்படும் என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பாரா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நகர்ப்புறங்களிலே இடங்கள் கிடைப்பதிலே கொஞ்சம் சிரமம் இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் சொல்லுகின்ற இடத்திலே, அவர் எப்போது இடம் பார்த்துத் தந்தாலும் அங்கே கடை திறக்கப்படும் என்கிற உறுதியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

4. அறிவிப்புகள்

(அ) பல்கலைக் கழகங்களின் ஆட்சிமன்றப் பேரவை மற்றும் ஆட்சிக்குழு உறுப்பினர்களை பேரவை உறுப்பினர்களிலிருந்து தேர்ந்தெடுத்தல் தொடர்பான கால அட்டவணை குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. சென்னைப் பல்கலைக் கழகத்தின் ஆட்சி மன்றப் பேரவைக்கு (செனட்) *6* உறுப்பினர்களையும், மதுரை காமராஜர் பல்கலைக் கழகத்தின் ஆட்சிமன்றப் பேரவைக்கு *4* உறுப்பினர்களையும், அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் ஆட்சிமன்றப் பேரவைக்கு மூன்று உறுப்பினர்களையும், தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக் கழகம், திருச்சிராப்பள்ளி பாரதிதாசன் பல்கலைக் கழகம், திருநெல்வேலி மனோன்மணீயம் சுந்தரனார் பல்கலைக் கழகம், தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக் கழகம் ஆகிய பல்கலைக் கழகங்களின் ஆட்சிமன்றப் பேரவைகளுக்குத் தலா இரண்டு உறுப்பினர்களையும், காரைக்குடி அழகப்பா பல்கலைக் கழக ஆட்சிமன்றப் பேரவைக்கு ஒரு உறுப்பினரையும், அண்ணா பல்கலைக் கழக ஆட்சிக் குழு (சிண்டிகேட்)விற்கு ஒரு உறுப்பினரையும் பேரவை உறுப்பினர்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பெற வேண்டும் என்ற கோரிக்கைகள் வந்துள்ளன. மேலும், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம், தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக் கழகம் ஆகியவற்றினுடைய, நிர்வாகக் குழுவிற்கு - Board of Management-க்கு, தலா ஒரு